# கத்தோலிக்க திருமறை (R. C)

சுட்டெண் :- ..........................................

தரம் : - 11

நேரம் :- 3. 00 மணித்தியாலம்

## பகுதி - I

❖ **கவனிக்க.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி ( X ) இடுக.**

(01) „'யாவே' என்பதன் பொருள்

(1) கடவுள் நம்மோடு (2) இறைவன் ஒருவரே

(3) ஆண்டவராகிய கடவுள் (4) மகிமை நிறை இறைவன்

(02) செப்துவாயின் பிரதி என்பது

(1) எபிரேய மொழியில் எழுதப்பட்டது

(2) அரமெயிக் மொழியில் எழுதப்பட்டது

(3) எபிரேய அரமெயிக்கில் மொழிபெயர்க்கப்பட்டது

(4) எபிரேய மொழியில் எழுதப்பட்டதை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது

(03) எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பெயர்களைக் கொண்டமைந்தது

(1) நாத்தான், ஒசேயா (2) எலியா, குல்தா

(3) எலிசா, ஆமோஸ் (4) மீக்காயா, ஒபதியா

(04) நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் எழுதப்பட்ட நற்செய்தி

(1) மாற்கு (2) லூக்கா (3) யோவான் (4) மத்தேயு

(05) படைப்புப் பற்றிய முதல் கதை கூறும் மரபு

(1) இணைச்சட்டம் (2) யாவோ (3) குரு (4) எலோகிம்

(06) செபமாலை என்பதன் ஆங்கிலச் சொல் "றோசரி" என்பது போல, அதன் இலத்தீன் சொல்

(1) சொசாரியுஸ் (2) றொசாறிங்கும்

(3) றோசறியும் (4) றொசாரியும்

(07) „கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றி விடாதீர்கள்" எனக் கூறியவர்

(1) தூய திருத்தந்தை 2ம் லியோ (2) தூய திருத்தந்தை பெரியலியோ

(3) தூய திருத்தந்தை சின்னலியோ (4) தூய திருத்தந்தை 3ம் லியோ

(08) வழியோரம் விழுந்த விதைகளுக்கு நடந்தது

(1) முட்செடிகள் வளர்ந்து நெருக்கி விட்டன
(2) பறவைகள் வந்து விழுங்கி விட்டன
(3) மண்ணில்லாததால் காய்ந்து விட்டன
(4) முளைத்தன, கதிரவன் மேலே எழ காய்ந்து போயின

(09) "கால்நடைசாவு" எத்தனையாவது துன்பமாக வழங்கப்பட்டது

(1) 3 வது (2) 9 வது
(3) 5 வது (4) 4 வது

(10) கிறிஸ்தவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்த எழுதப்பட்ட நூலாக திருவெளிப்பாட்டு நூல் ஏற்றுக் கொள்ளப்பட்ட காலப்பகுதி

(1) கி.பி 70 – கி.பி 80 (2) கி.பி 85 – கி.பி 95
(3) கி.பி 86 – கி.பி 89 (4) கி.பி 80 – கி.பி 96

(11) இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலைப் பயணத்தின் போது குடிக்க தண்ணீர் கிடைத்த இடங்கள்

(1) மாசா, மெரிபா, மாரா (2) மாசா, மெரிபா, கானான்
(3) மாசா, மாரா, எகிப்து (4) மாசா, மாரா, சிக்கேம்

(12) இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையை இரண்டு விதமாக முன்வைக்கும் இரு மரபுகள்

(1) E மரபு, J மரபு (2) D மரபு, E மரபு
(3) J மரபு, P மரபு (4) P மரபு, E மரபு

(13) "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளதே" என இயேசு எக்கேள்விக்குப் பதிலளித்தார்

(1) நீர் இறைமகன் என்றால் கல்லை அப்பமாக்கும்
(2) நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்
(3) நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உட்முடையதாகும்
(4) நீர் இறைமகனானால் என்னை வணங்கும்

(14) கூற்று : சாத்தானின் வல்லமையைத் தோற்கடித்து இறையாட்சி வந்துவிட்டது என்பதை உறுதிப்படுத்த இயேசு புதுமைகளைச் செய்தார்

காரணம் : புதுமைகள் ஊடாக, இறைவன் மனிதனுக்குக் காண்பிக்கும் அளவற்ற அன்பு விளங்குகிறது

(1) கூற்று சரி, காரணம் பிழை
(2) கூற்று பிழை, காரணம் சரி
(3) கூற்றும், காரணமும் பிழை
(4) கூற்றும், காரணமும் சரி

(15) குருத்துவம் சாராத ஆண் துறவற சபையைக் கொண்ட தொகுதி

(1) மாறிஸ் சகோதரர், அன்புச் சகோதரர்சபை
(2) அன்புச் சகோதரர், சில்வெஸ்ரர் பெனடிக்ற்சபை
(3) மாறிஸ் சகோதரர், சல்வற்றோறியன் சபை
(4) டிலாசால் சகோதரர், அமலமரித்தியாகிகள்சபை

The National e-learning Portal for the General Education

(16) A - பாஸ்கா காலத்தில் திவ்விய நற்கருணையை உட்கொள்வது

B - முப்பணிகளில் ஈடுபடுவது

C - வருடத்தில் ஒரு முறையாவது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவது

கத்தோலிக்க திருச்சபையின் கட்டளைகளாக அமைவது

(1) A யும் C யும்  (2) B யும், C யும்

(3) A யும் B யும்  (4) A யும், B யும், C யும்

(17) மரியாயின் சேனையை ஆரம்பித்தவர்

(1) பிறடிக் ஒசானம்  (2) யாக்கோமோ கொன்சால்வேஸ்

(3) திரு பிராங்டப்  (4) திரு பிரான்சிஸ்

(18) இளைஞரும் கட்டுப்பாடு உள்ளவராய் இருக்க அறிவுரை கூறு. நற்செயல்களைச் செய்வதில் எல்லா வகையிலும் நீயே ................................ இரு. இடைவெளிக்குப் பொருத்தமான இறைவார்த்தை

(1) நாணயமாய்  (2) முன்மாதிரியாய்  (3) கண்ணியமாய்  (4) கருத்தாய்

(19) உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகளில் மிக முக்கியமானதாக கருதப்படாதது

(1) பெற்றோர் பரம்பரைக் கத்தோலிக்கராக இருத்தல்

(2) திருமுழுக்குப் பெற்றிருத்தல்

(3) முறையான மறையறிவு பெற்றிருத்தல்

(4) அருள்நிலையில் வாழுதல்

(20)

| A | B |
|---|---|
| (A) தூய யோசவ்வாஸ் | (E) பெரிய குறிப்பிடம் மங்கள கீதம் |
| (B) திருத்தந்தை பிரான்சிஸ் | (F) கார்ஸ் ஜோசப் வொய்ரொல்லா |
| (C) யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகள் | (G) ஜோர்ச் மாரியோ பர்காலியோ |
| (D) 2ம் அருளப்பர் சின்னப்பர் | (H) 1671ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார் |

A தொகுதியை B தொகுதியுடன் இணைக்கும் போது சரியாக அமையும் தொகுதி

(1) A, F, B, E, C, H, D, G

(2) A, H, B, G, C, F, D, E

(3) A, H, B, G, C, E, D, F

(4) A, E, B, H, C, F, D, G

(21) நற்கருணையின் முன்னடையாளமாக விளங்குவது

(1) எரிபலி  (2) போசனப்பலி

(3) குற்றநீக்கப்பலி  (4) மெல்கிசதேக்பலி

(22) “அருளடையாளங்களின் அருளடையாளம் என அறிமுகம் செய்யப்படும் அருளடையாளம்

(1) திருமுழுக்கு  (2) தேவநற்கருணை

(3) ஒப்புரவு  (4) குருத்துவம்

(23) கிறிஸ்து அரசராக ஜெருசலேமுக்கு வருகை தந்ததை நினைவு கூரும் திருவழிபாட்டு நாள்

(1) விண்ணேற்ற நாள்  (2) பெரிய வியாழன்

(3) பெரிய வெள்ளி  (4) குருத்தோலை ஞாயிறு

The National e-learning Portal for The General Education

(24) "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" என்னும் கூற்றோடு பொருத்தமாகும் திருத்தூதர்

(1) தூய பேதுரு (2) தூய யாக்கோபு
(3) தூய யோவான் (4) தூய தோமா

❖ ***25 – 27 வரையான வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.***

(A) - கிறிஸ்து இயேசுவோடு ஓர் ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக்கொள்வது

(B) - மரியன்னையை அன்பு செய்து அவரை உலகிற்கு அறிமுகம் செய்தல்

(C) - விழுமியங்கள் நிறைந்த கத்தோலிக்க சிறார்களைப் பயிற்றுவித்தல்

(D) - பணிவு, நல்லுறவு, உண்மை, சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம், நீதி என்பவற்றினூடாக இறையாட்சிக்காக செயற்படல்

(E) - கிறிஸ்துவின் மதிப்பீடுகளையும், மனநிலையையும் தமக்குள் வளர்த்தல்

(F) - செபத்தினாலும், செயலினாலும் ஆன்மீக வாழ்வை உறுதி செய்து சமுதாயத்தைப் புனிதப்படுத்தல்

(25) கத்தோலிக்க மறைப் பாடசாலையின் குறிக்கோளைக் கொண்ட தொகுதி

(1) B, E (2) A, B (3) A, C (4) C, E

(26) மரியாயின் சேனையினரின் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட தொகுதி

(1) A, B (2) B, F (3) B, E (4) C, D

(27) இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் குறிக்கோளாக அமையும் தொகுதி

(1) D, E (2) A, B (3) E, F (4) C, F

(28) துறவற வாழ்வின் பண்புகளை முழுமையாகக் கொண்ட தொகுதி

(1) குழுமவாழ்வு, பணிவாழ்வு, ஏழ்மைவாழ்வு
(2) செபவாழ்வு, பணிவாழ்வு, கீழ்ப்படிவு
(3) குழுமவாழ்வு, செபவாழ்வு, கற்பு
(4) குழுமவாழ்வு, செபவாழ்வு, பணிவாழ்வு

(29) "எந்த ஒருவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதையும் அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது" என்று கூறியவர்

(1) யாக்கோமே கொண்சால்வேஸ் (2) தூய மரிய கொரற்றி
(3) தூய யோசவாஸ் (4) மைக்கல் ரொற்றிகோ

(30) இயேசு எரிக்கோவில் பார்வையற்று இருந்தவரை குணப்படுத்திய போது கூறிய வார்த்தை

(1) எழுந்து நடவும்
(2) உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று
(3) துணிவோடு இரு
(4) உன்னோடு நானிருக்கிறேன்

(31) இயேசு கற்பித்த செபத்தின் பண்புகளின் எண்ணிக்கை

(1) 8 (2) 3 (3) 5 (4) 7

(32) தியானத்தின் வரலாற்றில் 4ம் படிமுறை அழைக்கப்படுவது

(1) கொண்டெம்பிலாசியோ (2) ஓராசியோ

(3) மெடிடாசியோ (4) லெக்சியோ

(33) குவைட்ரிசம் என்ற வேதபேதகம் உருவாகிய காலம்

(1) 13ம் நூற்றாண்டு (2) 15ம் நூற்றாண்டு

(3) 14ம் நூற்றாண்டு (4) 17ம் நூற்றாண்டு

(34) தூய பவுல் தன் கைப்பட எழுதிய திருமுகங்களில் அடங்காதது

(1) உரோமையர் (2) பிலிப்பியர்

(3) கலாத்தியர் (4) கொலோசையர்

(35) "வெளிப்பாடு" என்பதற்காகப் பயன்படுத்தப்படும் கிரேக்க சொல்லின் அர்த்தம்

(1) தெளிவாகத் தெரிதல் (2) மறைந்துள்ள ஒன்று வெளிப்படுதல்

(3) வெளியானது பிரசித்தமாதல் (4) புதிதாகத் தோன்றல்

(36) "பிள்ளைகள் பெற்றோருக்கு பாசத்தையும், மரியாதையையும் காட்டி, அவர்களுக்கு நன்றியும் பணிவும் செலுத்தி கீழ்ப்படிய வேண்டும் என்பதைக் கூறும் நூல்

(1) கத்தோலிக்க திருமறை நூல் (2) திருவழிகாட்டி நூல்

(3) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் (4) குடும்ப வாழ்வு

(37) யோசேப்பு, போத்திபாரின் மனைவியின் விருப்பத்திற்கு இணங்கி இருப்பின் அவர் மீது மீறும் கட்டளைகளாவன

(1) 6வது, 9வது கட்டளைகள் (2) 3வது, 8வது கட்டளைகள்

(3) 10வது, 9வது கட்டளைகள் (4) 6வது, 10வது கட்டளைகள்

(38) தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் ………………………..

(1) கடவுளின் மக்கள் எனப்படுவர்

(2) அவர்கள் கடவுளைக் காண்பர்

(3) நிறைவு பெறுவர்

(4) நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்

(39) ஏட்டுச்சுருளை உண்ட போது வாயில் தேன் போல் இனித்ததை உணர்ந்த இறைவாக்கினர்

(1) தானியேல் (2) எசாயா (3) எரேமியா (4) எசேக்கியேல்

(40) மேரி தினமும் காலையில் எழுந்தவுடன் செபித்து தன் கடமைகளை நிறைவேற்றி பெற்றோரை வணங்கி நேரத்துடன் பாடசாலை சென்று, எல்லோருடனும் அன்பாக பழகுகிறாள். இவரது வாழ்வு மூலம் கிடைக்கும் செய்தி

(1) நன்கு படிக்க வேண்டும் என்றால் எல்லோருடனும் பழக வேண்டும்

(2) பெற்றோரை வணங்கினால் கேட்பது கிடைக்கும்

(3) இறைவனையும், பெற்றோரையும் உயர்வாக மதிக்கும் போது ஏனையோரை இயல்பாக அன்பு செய்ய முடியும்

(4) இறைவனுக்கும், பெற்றோருக்கும் பயத்தில் கடமைகளைச் செய்ய வேண்டும்

(40 x 1 = 40 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுடன் ஏனையவற்றில் இருந்து 4 வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

(01) **சுருக்கமான விடை தருக.**

(i) மரியன்னையின் விழாக்கள் இரண்டு தருக.

(ii) சுத்தபோசனம் அனுசரிக்க வேண்டிய நாட்கள் இரண்டு தருக.

(iii) எலோகிம் பாரம்பரியத்தில் வரக்கூடிய இரண்டு சம்பவங்களை எழுதுக.

(iv) இணைத்திருமறை நூல்கள் நான்கு தருக.

(v) கடவுள் ஏவாளுக்குக் கொடுத்த தண்டனைகள் இரண்டு தருக.

(vi) ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக.

(vii) குருக்களின் இரு வகைகளையும் தருக.

(viii) படைப்பின் இரண்டாவது கதையில் இறைவன் மனிதனுக்குக் கொடுத்த பொறுப்புக்கள் இரண்டையும் தருக.

(ix) பலி செலுத்துவதன் நோக்கங்கள் இரண்டையும் தருக.

(x) திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தின் காலங்களை ஒழுங்குமுறைப்படித் தருக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

(02) (i) திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் அடையாளப் பொருட்கள் இரண்டு தருக.

(ii) ஞானப் பெற்றோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் மூன்று எழுதுக.

(iii) திருமுழுக்கின் மூலம் நீர் பெறும் இறையருள்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(03) (i) மனித வாழ்வுக்கு சமாதானம் ஏன் அவசியமாகிறது?

(ii) சமாதானத்தைக் கட்டியெழுப்ப முக்கியமாக தேவையான பண்புகள் மூன்று தருக.

(iii) தூய பிரான்சிஸ் அசிசியின் செபத்தினை எழுதுக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(04) (i) இறையாட்சியை உரிமையாக்கிக்கொள்ள நாம் செய்ய வேண்டியவை எவை?

(ii) உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் மூன்றையும் ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்கள் மூன்றையும் அட்டவணைப்படுத்துக.

(iii) பல பிரச்சனைகளை எதிர்நோக்கும் சமூகத்திற்கு உம்மால் ஆற்றக்கூடிய பணிகள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(05) (i) நான்கு நற்செய்திகளின் அடையாளங்களை எழுதுக.

(ii) லூக்கா நற்செய்தியின் மறுபெயர்கள் மூன்று தருக.

(iii) நற்செய்தி நூல்களை வாசிப்பதனால் உமது வாழ்வின் மாற்றத்திற்கு கிடைத்த செய்திகள் ஐந்து தருக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(06) (i) 2ம் வத்திக்கான் சங்க ஒன்றுகூடலின் வழியாக கிறிஸ்தவ சபையின் சமாதானத்தை முன்னிட்டு வெளியிட்ட இரண்டு பிரதான விதித்தொகுப்புக்கள் இரண்டு எழுதுக.

(ii) கத்தோலிக்க திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகள் மூன்று தருக.

(iii) கிறிஸ்தவ சபையின் ஒற்றுமைக்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் ஐந்து தருக.

(2 + 3 + 5= 10 புள்ளிகள்)

(07) விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(i) திருப்பலி

(ii) உயிர்களை மதிப்போம்

(iii) தூய யோசவாஸ்

(iv) சீனாய் உடன்படிக்கை

(2 x 5 = 10 புள்ளிகள்)

The National e-learning Portal for General Education